O.S.No.65/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:24.02.2026

P.W.1:ராமகிருஷ்ணன் த/பெ– சின்னமாரய்ய நாயக்கர்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

8) 2ம் பிரதிவாதி ஆறுமுகம் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் வாதி சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை போன்று எங்கள் சமுதாயத்தை சேர்ந்த வேறு நபர்களும் வாதி சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரியல்ல. ஒட்டுமொத்த கோட்டைபட்டி இந்து தொட்டிநாயக்கர் சமுதாயத்தின் சார்பாக இவ்வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை சங்கத்தில் உறுப்பினராக ஏன் சேர்க்கவில்லை என்றால் சங்க இடத்தில் 2ம் பிரதிவாதி வசித்து வந்தார், அவர் மீது வழக்கு தாக்கல் செய்து வெளியேற்றியதால் விரோதத்தில் உள்ளார். இவ்வழக்கை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து விருதுநகர் மையப்பகுதியில் உள்ளது என்றால் சரிதான்.

9) தாவா சொத்தின் தற்போதைய மதிப்பு தோராயமாக ரூ.1கோடி இருக்கும் என்றால் அது பற்றி தெரியவில்லை. தாவா சொத்தில் 7 கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். மாத வாடகையாக மாதம் ரூ.11,000/- வரும். மேற்படி வாடகை தொகையை வாதி சங்கம் பெற்று வருகிறது. தாவா சொத்து வாதி சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு கிரைய ஆவணமோ, பட்டா அல்லது மூல

ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான், ரசீது மட்டும் உள்ளது.

10) என்னிடம் காட்டப்படும் டவுண் சர்வே ரிஜிஸ்டர் தாவா சொத்திற்குரியது என்றால் சரிதான். டவுண் சர்வே ரிஜிஸ்டர் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். டவுண் சர்வே எண்.206 ல் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். டவுண் சர்வே எண்.206 ல் முனிசிபல் கிணறு காலியிடம் தூர்ந்தது என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடம் நத்தம் சர்க்கார் புறம்போக்கு என பி.வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நகராட்சியில் ரசீது கட்டியுள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

11) 2018 ல் 2 ம் பிரதிவாதி தாவா சொத்து நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என எங்கள் மீது உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர், சென்னை அவர்களிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான், அதற்கு நாங்கள் பதில் அளித்துள்ளோம். 2019 ம் வருடம் இறுதியில் தாவா சொத்து நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்றும், கட்டிட வாடகை தொகையை நகராட்சிக்கு நாங்கள் செலுத்த வேண்டும் என்றும், சொத்தை காலி செய்து நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர், சென்னை அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளோம். அந்த உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன விபரங்கள் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு

நடந்தவை என்றால் சரிதான்.

12) தாவா வழக்கில் மேற்படி விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும், 2ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கும் இடையே தாவா சொத்து சம்மந்தமாக 2018ம் வருடம் பிரச்சனை ஆரம்பித்தது என்றால் சரிதான். தாவா வழக்கு 2019ம் வருடம் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை ஏன் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் தாவா சொத்திற்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லை என்பதால் தரப்பினராக சேர்க்கவில்லை. தாவா சொத்திற்கு அருகே விநாயகர் மற்றும் கருப்பசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அந்த கோவிலில் பூசாரியாக 1997 ம் வருடம் முதல் 2010ம் வருடம் வரை இருந்தார் என்றால் சரியல்ல, எந்த காலத்திலும் அவர் பூசாரியாக இல்லை. கோவில் அருகே அடிபைப் இருந்தது என்றால் சரியல்ல, தற்போது அதில் போர் அமைத்துள்ளோம். வா.சா.ஆ.4 அறிவிப்பு 1ம் பிரதிவாதியால் 30.08.2018ம் தேதி எங்கள் சங்கத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பின் மீது உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றோம். அந்த உத்தரவை இவ்வழக்கில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவை இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

13) தாவா சொத்து 1ம் பிரதிவாதி நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தங்கவேல் சாமி மேற்படி கோவிலில் எத்தனை வருடமாக பூசாரியாக இருந்தார் என்றால் அவர் பரம்பரை பூசாரியாக இருந்தார், அவர் இறப்பிற்கு பின்னர் அவரது மகன் ஜெயராம கிருஷ்ணன் பூசாரியாக உள்ளார். தங்கவேல் சாமி நகராட்சி அலுவலகத்தில் கிளார்க்

ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நகராட்சியில் தங்கவேல்சாமி மூலம் ரசீது போட்டோம் என்றால் சரியல்ல.

14) தாவா சொத்து வாதிகளுக்கு உரிமைப்பட்டது இல்லை என்றும், தாவா சொத்தை காலி செய்து 1ம் பிரதிவாதி நகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் எங்களது அனுபவத்தில் தாவா சொத்து உள்ளது, தாவா சொத்திற்கு சொத்து வரி செலுத்தி வருகிறோம். அதன் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் நகராட்சி அனுமதியுடன் உரிமை கொண்டாடுகிறோம். நகராட்சியில் வேலை பார்த்த வேண்டிய நபர்கள் மூலம் போலியாக தாவா சொத்திற்கு ரசீது போட்டுள்ளோம் என்றும், அதன் மூலம் தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதன் காரணமாக நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.